# எஸ்.பி.வேலுமணியின் வங்கி கணக்கு முடக்கம்!



சென்னை, ஆக. 12-

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் வங்கி கணக்கை லஞ்ச ஒழிப்பு போலீசார் முடக்கி உள்ளனர்.

கோவை தொண்டாமுத்தூர் தொகுதி அ.தி.மு.க., எம்.எல்.ஏ., எஸ்.பி.வேலுமணி. அ.தி.மு.க., முன்னாள் அமைச்சரான இவர் மீது, மாநகராட்சிகளில், 811 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்த முறைகேடு குறித்து, லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார், கோவை சுகுணாபுரத்தில் உள்ள எஸ்.பி.வேலுமணியின் வீடு, இடையர்பாளையத்தில் உள்ள அவரது சகோதரர் அன்பரசன் வீடு உள்ளிட்ட கோவையில் 42 இடங்கள் உட்பட மாநிலம் முழுவதும் 60 இடங்களில் ஆக., 10 சோதனை நடத்தினர். தொடர்ந்து, நேற்றும் (12ம் தேதி) எஸ்.பி.வேலுமணிக்கு சொந்தமான சில இடங்களில் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் கணக்கில் வராத ரூ.13 லட்சம் ரொக்கப் பணம், ரூ.2 கோடி மதிப்பிலான ஆவணங்கள், கணினிகள், ஹார்ட்டிஸ்க்குகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் அவரது சொத்துகள் குறித்த அனைத்துஆவணங்களும்பறிமுதல்செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கையாக எஸ்.பி.வேலுமணியின் வங்கி கணக்குகள் மற்றும் லாக்கர்களை லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்கள் முடக்கியுள்ளனர். மேலும், பறிமுதல் செய்த சொத்து ஆவணங்களை ஆய்வு செய்யும் பணியில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# காங்., கட்சியின் டுவிட்டர் கணக்கு முடக்கம்!

புதுடில்லி, ஆக. 12-

விதிமுறைகளை மீறி செயல்பட்டதாக கூறி காங்கிரஸ் கட்சியின் டுவிட்டர் கணக்கு தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன், டில்லியில் 9 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார். சிறுமியின் குடும்பத்தினரை சந்தித்த காங்கிரஸ் எம்.பி., ராகுல் காந்தி, சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்த புகைப்படத்தை டுவிட்டரில் பதிவிட்டார். 'போக்சோ' சட்டப்படி, பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட சிறுமியின் புகைப்படம், அந்தசிறுமியின்குடும்பத்தார், பெற்றோர்புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதோ அல்லது நாளேடுகள், தொலைக்காட்சிகளில் வெளியிடுவதோ சட்டப்படி குற்றம்.

இது தொடர்பாக தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், டுவிட்டர் நிறுவனத்துக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து, ராகுல் காந்தி, தன் டுவிட்டர் பக்கத்தில் இருந்து சிறுமியின் தாயுடன் பேசியது தொடர்பான புகைப்படத்தை நீக்கினார். இருப்பினும், ராகுல் காந்தியின், டுவிட்டர் கணக்கை டுவிட்டர் நிறுவனம் முடக்கியது. ராகுல் காந்தி மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இதற்கிடையே, காங்., கட்சியின் தலைமை செய்தித்தொடர்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா உள்ளிட்ட மூத்த தலைவர்கள் ஐந்து பேரின் டுவிட்டர் கணக்குகள் முடக்கப்பட்டன. இந்த நிலையில், விதிகளை மீறி செயல்பட்டதாகக் கூறி, காங்கிரஸ் கட்சியின் டுவிட்டர் கணக்கை முடக்கி, டுவிட்டர் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது, பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தினமும் மாலையில்
ஆங்கிலத்தில்
செய்திகளை படிக்க
EVENING TAMIL NADU
www.eveningtamilnadu.com
E-mail: eveningtamilnadu@gmail.com
FB: eveningtamilnadu

மாலை தமிழகம்
செய்தி பிரிவு தொடர்புக்கு
செல்: 7358244058,
9176415801,
9444059392
newsmataeditor@gmail.com

மாலை தமிழகம்
செய்தியாளர் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக
உள்ளூர்களில் செய்தி, விளம்பரம் சேகரிப்பில்
அனுபவமும், ஆர்வமும் உள்ளவர்கள்
தொடர்பு கொள்ளவும்.
போன் - 9444052303
இமெயில் முகவரி - newsmataeditor@gmail.com




# தோல்வி!

'புவி கண்காணிப்புப் பணிகளுக்காக, இ.ஓ.எஸ்.,–03 செயற்கைக்கோளை சுமந்து, விண்ணில் ஏவப்பட்ட ஜி.எஸ்.எல்.வி., ராக்கெட்டில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், இலக்கை எட்டமுடியாமல் தோல்வியில் முடிந்தது' என, இஸ்ரோ தெரிவித்துள்ளது.



# தொழில்நுட்ப கோளாறு: ஜி.எஸ்.எல்.வி., எப்-10 ராக்கெட் பயணம்...



ஸ்ரீஹரிகோட்டா, ஆக. 12

புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்பு பணிகளுக்காக இ.ஓ.எஸ்.,-03 (ஜிஐசாட்) என்ற அதிநவீன, 'ஜியோ இமேஜிங்' செயற்கைக் கோளை இஸ்ரோ தயாரித்தது.

ராக்கெட் ஏவுதலுக்கான 26 மணி நேர கவுன்ட்-டவுன் முடிந்த நிலையில், ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து, இன்று (ஆக., 12) காலை 5.43 மணிக்கு, இ.ஓ.எஸ்.,-03 செயற்கைக் கோளை சுமந்து கொண்டு ஜி.எஸ்.எல்.வி., எப்-10 ராக்கெட் விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டது.

இ.ஓ.எஸ்., செயற்கைக் கோள் 2,268 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட் காலம், 10 ஆண்டுகள். இதிலுள்ள, ஐந்து விதமான '3டி' கேமராக்கள் மற்றும் தொலைநோக்கி மூலம் புவிப்பரப்பை துல்லியமாக படம் எடுக்க முடியும். தட்பவெப்பநிலை மற்றும் வானிலை நிலவரங்களை நிகழ்நேர தன்மையில் தொடர்ந்து கண்காணிக்கும். இதுதவிர புயல் போன்ற பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள உதவும். அதனுடன் வனப்பகுதிகள், விவசாயம், நீர்நிலைகள், மேகத்திரள்கள் வெடிப்பு, இடியின் தாக்கம் ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் இது பயன்படும்.

இந்த நிலையில் விண்ணில்செலுத்தப்பட்ட ஜி.எஸ்.எல்.வி., எப்-10 ராக்கெட்டில் திடீரென தொழில் நுட்பட கோளாறு ஏற்பட்டதால், புவிசுற்றுப் பாதையை வெற்றிகரமாக அடையவில்லை என, இஸ்ரோ தெரிவித்துள்ளது. இது குறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பில், 'ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஸ்தவான் விண்வெளி நிலையத்திலிருந்து ஜி.எஸ்.எல்.வி., எப்-10 ராக்கெட் மூலம் இ.ஓ.எஸ்.,-03 செயற்கைகோள் விண்ணில் செலுத்தப் பட்டது.

ஜி.எஸ்.எல்.வி., ராக்கெட்டின் முதல் இரு படிநிலைகள், சிறப்பாகவே செயல்பட்டு பிரிந்தன. ஆனால், செயற்கைக் கோளை வெற்றிகரமாக புவிசுற்றுப்பாதையில் நிலைநிறுத்தவில்லை. ராக்கெட்டின் கிரயோஜெனிக் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, ஜி.எஸ்.எல்.வி., எப்-10 ராக்கெட் திட்டம் முழுமை அடையவில்லை' என தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, இஸ்ரோ தலைவர் கே.சிவன் அளித்த பேட்டியில், ''ஜி.எஸ்.எல்.வி., எப்-10 ராக்கெட்டின் கிரயோஜெனிக் இன்ஜின் பகுதியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயற்கைக்கோளை விண்ணில் நிலைநிறுத்த முடியவில்லை. என்னுடைய நண்பர்களுக்கு இதைக் கூற விரும்கிறேன்,'' என்றார்.

நான்கு பிரிவுகளாக அமைக்கப்பட்ட ஜி.எஸ்.எல்.வி., ராக்கெட்டில் இரு பிரிவுகள் மட்டும் பிரிந்து வெற்றிகரமாக இயங்கின. ஆனால், 3வது பிரிவு இயங்காததால் தோல்வி அடைந்துள்ளது.

இந்த செயற்கைக் கோளை கடந்த ஏப்ரல் அல்லது மே மாதம் செலுத்த திட்டமிடப் பட்டது. ஆனால், கொரோனா தொற்று காரணமாக ஆகஸ்ட் மாதத்துக்கு தள்ளி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பஸ் கட்டணம் உயர்வு இப்போதைக்கு இல்லை: அமைச்சர் ராஜகண்ணப்பன்!



சென்னை, ஆக. 12-

''தமிழகத்தில் பேருந்து கட்டணம் தற்போதைக்கு உயர்த்தப்படாது,'' என, போக்குவரத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்

சென்னையில் நிறுத்தப்பட்ட மற்றும் புதிய வழித்தடங்களில், 23 மாநகர பேருந்துகள் சேவை தொடக்க நிகழ்ச்சி, மேற்கு சைதாப்பேட்டையில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில், போக்குவரத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜகண்ணப்பன், ''தமிழகத்தில் பேருந்து கட்டணம் தற்போதைக்கு உயர்த்தப்படாது. நிதிச்சுமை பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. மக்களுக்கு சேவை செய்வதற்காகவே செயல்படுவோம். வண்டலூர் அருகே கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையம் இந்த ஆட்சி காலத்தில் கட்டி முடிக்கப்படும். பேருந்துநிலையங்களில் மீண்டும் அம்மா குடிநீர் பாட்டில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

போக்கு வரத்துத்துறை இனி புதிய பொலிவுடன் இயங்கும். கடந்த அதிமுக ஆட்சியில் தப்பு செய்தவர்கள் கண்டிப்பாக தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும்,'' என்றார். தொடர்ந்து, அமைச்சர்கள் ராஜகண்ணப்பனும், மா.சுப்பிரமணியனும், மாநகர பேருந்துகளில் பயணித்தனர்.

# ராகுல் காந்தி தலைமையில் டில்லியில் எதிர்க்கட்சிகள் பேரணி!




புதுடில்லி, ஆக. 12-

பார்லிமென்ட் வளாகத்தில் இருந்து ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேரணியாக சென்றனர்.

பார்லி., குளிர்கால கூட்டத்தொடர் ஜூலை 19 முதல் ஆக., 13 வரை நடத்ததிட்டமிடப்பட்டன. இந்த நிலையில், கூட்டம் தொடங்கிய முதல் நாளிலிருந்தே பெகாஸஸ், வேளாண் சட்டம், பெட்ரோல், டீசல் விலை உயர்வு குறித்து விவாதிக்க கோரி எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டு வந்தனர். கூட்டத்தொடர் நிறைவடைய இரு நாள்கள் மீதம் இருந்த நிலையில், நேற்றே (ஆக. 11) பார்லி., யில் இரு அவைகளும் முடித்து கொள்ளப்பட்டன.

இந்த நிலையில், ராகுல்காந்தி தலைமையில் இன்று (12ம் தேதி) காலை எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆலோசனையில் ஈடுபட்டனர். பிறகு, பார்லி., கூட்டத்தை முன்கூட்டியே முடித்தது, பெகாஸஸ் விவகாரம், வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி ராகுல் காந்தி தலைமையில் அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பேரணியாக சென்றனர்.

இந்த பேரணியில், காங்கிரஸ், தி.மு.க., திரிணமூல் உள்ளிட்ட பிரதான கட்சிகளின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த ராகுல் காந்தி, ''பார்லிமென்ட்டின் அவைகளில் எங்களை பேசவிடாதது, ஜனநாயக படுகொலை. எங்களை பார்லி., யில் பேசவிடாததால், ஊடகங்கள் முன் பேசுகிறோம். எங்களை பேச விடாமல் செய்ததன் மூலம், நாட்டின் 60 சதவீத மக்களின் குரல் நசுக்கப்பட்டுள்ளது. அவமானப்படுத்தப்பட்டுள்ளது. பார்லி., முடங்கியதற்கு, பா.ஜ., வே காரணம்,'' என்றார்.

ஸ்டேன்பேக்ஸ் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம்: எஸ். கே. என்கிளேவ், புதிய எண் 4, (பழைய எண் 47) நௌரோஜி சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 600 031
CIN - L36991TN1991PLC021888, Website: www.stanpacks.in, Email: info@blissgroup.com
Tel: 91-44-26452325; Fax: 91-44-26451720

ஜூன் 30, 2021 வரை முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிவடைந்த 3 மாதங்கள் 30.06.2021 | முடிவடைந்த 12 மாதங்கள 31.03.2021 | முடிவடைந்த 3 மாதங்கள் 30.06.2020 |
|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்படாதது |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 1,227.25 | 3,042.54 | 506.41 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 9.50 | (110.96) | (65.50) |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் /(நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 9.50 | (110.96) | (65.50) |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 9.50 | (134.78) | (65.50) |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்(இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் /(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 9.50 | (134.78) | (65.50) |
| 6 | சமபங்கு முலதனம் (ஒவ்வொரு பங்கு ரூ.10/- ) | 609.60 | 609.60 | 609.60 |
| 7 | கையிருப்புகள் (முந்தைய ஆண்டு கணக்கில் மறுமதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக) | (442.76) | (452.26) | (382.98) |
| 8 | பங்கு விகித ஈட்டுதொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (அசாதாரண இனங்களுக்கு முன்) அடிப்படை குறைமதிப்பு | 0.16 | (2.21) | (1.08) |


குறிப்பு:மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகள் வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு/முழு ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.stanpacks.in என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் URL - http://www.bseindia.com/stock-share-price/stanpacks-(india)-ltd/stanpack/530931/என்ற இணையதளத்திலும் காணலாம்.

வாரியத்தின் சார்பாக


இடம் : சென்னை
நாள் : 11.08.2021

G.V.கோபிநாத்
நிர்வாக இயக்குநர்

பலன் பெற்றோரின் பாராட்டுரைகள்!




**பக்கவாதம்:** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனது வலது கையும்,காலும், செயலிழந்துவிட்டது.நான் ஏழை என்பதால் அதிக செலவு செய்யமுடியவில்லை. பிறகு ஆறுமாதமாக எந்த வேலையும் செய்ய முடியவில்லை பிறகு டிவி யின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டு இப்பொழுது நன்றாக இருக்கிறேன். ஆர்.ஜெயராமன்,புதுவாயல், பொன்னேரி வட்டம்.




**முடக்குவாதம்:** எனக்கு 6,7 வருடங்களாக உடல் முழுவதும் எல்லா மூட்டுகளிலும் வலியும், வேதனையும் இருந்தது. தோள், கழுத்து, முதுகு, இடுப்பு,கால் என்று எல்லா இடங்களிலும் வலி இருந்தது. இதன் காரணமாக வீட்டு வேலையைக்கூட என்னால் செய்ய முடியாது. பல மருத்துவர்களிடம் மருந்து சாப்பிட்டும் வலி நின்றபாடில்லை. பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன். இப்போழுது நன்றாக இருக்கிறேன்.ஆர். இந்திரா, வடபழனி



**ஆஸ்துமா:** நான் 13 ஆண்டுகளாக ஆஸ்துமா நோயினால் மூச்சுவிட முடியாமல் அவதிப்பட்டேன் . இரவு தூங்கவும் முடியாது நடக்கவும் முடியாது. ஆங்கில மருந்தும் வேலை செய்யவில்லை. பிறகு டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டு இப்பொது நீண்ட தூரம் நடக்கிறேன். ஐஸ் மோர் குடிக்கிறேன். சாந்தி சார்லஸ்,கமலம் தெரு, புது அகரம் சென்னை –99



**சோரியாசிஸ்:** எனக்கு 14 ஆண்டுகளாக தலையில் பொடுகு இருந்தது. உடம்பில் மீன் செதில்போல் இருந்தது. எப்பொழுதும் உடம்பெல்லாம் அரிப்பு, நமச்சல் இருக்கும் எங்கேயும் செல்லமுடியமால் அதிகமாக கஷ்டபட்டேன். பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டேன் . இப்பொழுது நன்றாக இருக்கிறேன்.டி.சிபு குமார், பண்ருட்டி.



**இடுப்பு வலி:** எனக்கு 2,3 வருடங்களாக இடுப்பு வலியால் உட்காரவோ நிற்கவோ முடியாது, பெரிய பெரிய மருத்துவமனை சென்று பார்த்தேன். எந்த பலனும் இல்லை பிறகு ஆப்ரேஷன் செய்யச் சொன்னார்கள் நான் பயந்து போய் விட்டேன் பிறகு புத்தகத்தின் மூலம் டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன்.ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன் இப்பொழுது விவாசயம் வேலைகள் எல்லாம் நன்றாக செய்கிறேன். சிவமணி,கரிவேடு கிராமம், ஆற்காடு வட்டம்.

பக்கவிளைவுகள், பத்தியம் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



டாக்டர் ஹக்கீம் S.A. சையத்சத்தார்
ரப்பானி வைத்யசாலா
Old No.65, New.139,டாக்டர் பெசன்ட் ரோடு,
(மீசாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்) சென்னை - 14
044-28476969/28470874

**விஜய் சூப்பர் டிவியில்** திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8.00 மணி முதல் 8.30 மணி.
**கலைஞர் செய்தியில்** திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 முதல் 10 மணி வரை
டாக்டர் சையத் சத்தாரின் பேட்டியை காணத்தவறாதீர்கள்.
rabbani vaidya sala www.com

மாலை தமிழகம்
நிர்வாக அலுவலகம்,
எண்.3, 5வது குறுக்குத்தெரு அவ்வை திருநகர்,
விருகம்பாக்கம், சென்னை - 600 092.
maalaitamizhagam@gmail.com
Phone:044-24795411, 9840094267

**THE TAMILNADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LTD.**
**(A Government of Tamilnadu Undertaking)**
**TIRUVALLUR BRANCH**
No.86 C & D, 2nd Main Road, Ambattur, Industrial Estate,Chennai – 600 058.
Phone : 044-26257664/26248644.Email : bmtiruvallur@tiic.org

**Under Rule 8(1), SARFAESI ACT POSSESSION NOTICE (for immovable property)**

Whereas the undersigned, being the Authorized Officer of The Tamilnadu Industrial Investment Corporation Limited (TIIC), under the Securitisation And Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and in exercise of powers conferred under Section 13(2) read with rule 8/9 of the Security Interest (Enforcement) Rules 2002 issued a demand notice dated **15.09.2020** calling upon the borrower **M/s. Aadarsham Technologies, No. 9/10, Munusamy Reddiar Street, Jambugeshwarar Nagar, Korattur, Chennai-600 080** represented by its Proprietor(i) **R.Govindasamy**, S/o. Thiru.M.Renu, residing at Plot No.164, First Floor, 8th Cross Street, Lakshmi Nagar Extension, Porur, Chennai-600 116 and guarantor / collateral owner (ii) **Thirmathi. S.Kavitha**, W/o. R.Govindasamy, residing at Plot No.164, First Floor, 8th Cross Street, Lakshmi Nagar Extension, Porur, Chennai-600 116 to repay the amount mentioned in the notice being **Rs.33,89,387/- (Rupees Thirty Three Lakhs Eighty Nine Thousand and Three Hundred Eighty Seven only)** together with further interest from **01.09.2020** within 60 days from the date of receipt of the said notice.

The borrower/guarantors having failed to repay the amount, notice is hereby given to the borrower/guarantors and the public in general that the undersigned has taken symbolic possession of the property described herein below in 'as is where is' condition in exercise of powers conferred on him/her under Section 13(4) of the said Act read with rule 8/9 of the said rules on this **06 day of August 2021.**

The borrower/guarantors in particular and the public in general are hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of The Tamilnadu Industrial Investment Corporation Ltd., No.86 C &D, II Main Road, Ambattur Industrial Estate, Chennai–600 058 for an amount of Rs.33,89,387/- (Rupees Thirty Three Lakhs Eighty Nine Thousand and Three Hundred Eighty Seven only) and further interest from 01.09.2020 thereon.

**DESCRIPTION OF THE IMMOVABLE PROPERTY**

**Collateral Security:-** All that Piece and parcel of Land measuring 1950 sq.ft bearing Plot No.13, Comprised in Survey Nos.53 & 52 of Kalinjur Village, Katpadi Taluk, Vellore District and bound on the North by:- Park South by:-Proposed Road (now 60 feet Road is provided) East by:-Plot No.14 West by:-23 Feet Road East West on the North Side 30 feet East West on the South Side 30 feet North South on the East Side 65 feet North South on the West Side 65 feet.

With this land admeasuring 1950 sq.ft and it is now comprised in Manaivari Patta No.1729, in New Survey No.52/4 (35 sq.mtr) and in the Manaivari Patta No.1730, in New Survey No.53/2 (146 sq.mtr) and the property is situated within the Sub-Registration District of Vellore and Registration District of Katpadi. The above property is owned by Thiru.R.Govindasamy and Tmt.S.Kavitha.

**Authorised Officer,**
**Date: 06.08.2021** **The Tamilnadu Industrial Investment Corporation Ltd.,**
**Place: Ambattur.** **Tiruvallur Branch, Ambattur, Chennai – 600 058.**

---

**IDBI BANK**
CIN: L65190MH2004GOI148838

आईडीबीआई बैंक लिमिटेड
CIN: L65190MH2004GOI148838
आईडीबीआई बैंक लिमिटेड
पंजीकृत कार्यालय : आईडीबीआई टॉवर, डब्ल्यूटीसी कॉम्प्लेक्स, कफ परेड,
मुंबई - 400 005.
टेलिफोन : (+91 22) 6655 3355, 2218 9111
फैक्स : (+91 22) 2218 0411
वेबसाइट : www.idbi.com

**IDBI Bank Limited**
Regd. Office : IDBI Tower, WTC Complex, Cuffe Parade, Mumbai - 400 005
TEL.: (+91 22) 6655 3355, 2218 9111 FAX. (+91 22) 2218 0411
Website : www.idbi.com

**"Without Prejudice"**

**IDBI/H.O./NMG/GJPL/ /2021-22** **July 14, 2021**

| | |
|---|---|
| Shri Mohan G. Akkarakaran (Guarantor),<br>Flat no 101, Sri Sai Vihar CHS Ltd,<br>PNT Colony, Gandhi Nagar, Dombivli,<br>Thane – 421201<br>also at<br>Flat no 201, A Wing, Sereno Lodha,<br>Golf Links, Palava City,<br>Dombivali (East), Thane – 421204<br>and<br>Akkarakaran House, Panan Lane ,<br>Cheroor P.O.Thrissur-680008 | Santha M. Akkarakaran (Guarantor),<br>Flat no 101, Sri Sai Vihar CHS Ltd,<br>PNT Colony, Gandhi Nagar, Dombivli,<br>Thane – 421201<br>also at<br>Flat no 201, A Wing, Sereno Lodha,<br>Golf Links, Palava City,<br>Dombivali (East), Thane – 421204<br>and<br>Akkarakaran House, Panan Lane ,Cheroor<br>P.O. Thrissur-680008 |

Dear Sir/Madam

**Re: Declaration of Guarantors of Goodwin Jewellers Private Limited as Wilful Defaulters and Opportunity for Representation there against.**

1. We refer to our show cause notice (SCN) no. IDBI/NMG/Andheri/2019-20/310, dated January 29, 2020 for declaring the Guarantors of Goodwin Jewellers Private Limited as wilful defaulters as per RBI's Master Circular on Wilful Defaulters dated July 01, 2015 in terms of Clause No. Clause 2.1.3 (b) [2.2.1(d)], 2.1.3 (c) [2.2.2] & 2.1.3 (d) on the following grounds and paper publication made on January 04. 2021.

| Sr. No. | Criteria for Wilful Default | Position of Borrower |
|---|---|---|
| 2.1.3 (b) | **Diversion of funds:**<br>**The unit has defaulted in meeting its payment / repayment obligations to the lender and has not utilized the finance from the lender for the specific purposes for which finance was availed of but has diverted the funds for other purposes. Diversion of funds, as referred above, would be construed to include any one of the undernoted occurrences:** | |
| 2.2.1(d) | Routing of funds through any bank other than the lender bank or members of consortium without prior permission of the lender. | As per the above CRILC report the company has current account with Federal Bank, a non-lending bank. The company is also having current accounts with other non lending banks viz. Axis Bank and HDFC Bank which are not reported in the CRILC report.<br>The consortium lenders had been advising the company and its promoters to close the current account with non-lending banks and submit the proof of closure to consortium lenders. The consortium lenders including IDBI Bank had written directly to non-lending banks to close the account. However, the current accounts are still continuing with Federal Bank, Axis Bank and HDFC Bank. Since the company has not routed adequate cashflows through consortium banks and not shared the account statements, the consortium is of the view that company would have routed transactions with non-lending banks.<br>It may be mentioned that none of the consortium lenders including IDBI Bank has given NOC for maintaining current accounts with non-lending banks. |
| 2.1.3 (c) | **Siphoning off of funds:**<br>**The unit has defaulted in meeting its payment / repayment obligations to the lender and has siphoned off the funds so that the funds have not been utilized for the specific purpose for which finance was availed of, nor are the funds available with the unit in the form of other assets.** | |
| 2.2.2 | Siphoning of funds, as referred above, should be construed to occur if any funds borrowed from banks / FIs are utilized for purposes un-related to the operations of the borrower, to the detriment of the financial health of the entity or of the lender. The decision as to whether a particular instance amounts to siphoning of funds would have to be a judgment of the lenders based on objective facts and circumstances of the case. | As per the latest Stock Audit Report dated July 26, 2019 initiated by SBI the stock auditor has certified that the total value of stock available as on June 30, 2019 was Rs.105.08 crore and there was adequate Drawing Power available to the cover the FB limits sanctioned by consortium lenders. Further the company was submitting stock statements regularly till October 2019 and as per the latest stock statement submitted by the company the total stock available was Rs.104.12 crore as on September 30, 2019.<br>On November 02, 2019, there was news article in Times of India describing that the Police team of Thane EOW broke opened the Dombivali Showroom of the company to recover valuables and documents and found out that the showroom had been emptied out. Further, on November 03, 2019 the same news paper published another article saying that the EOW team did not find any gold on opening second Goodwin Jeweller Shop in Thane, Naupada area that was sealed by local police, raising their doubts about the promoter's intension. |
| 2.1.3 (d) | Disposal/ removing assets financed: The unit has defaulted in meeting its payment / repayment obligations to the lender and has also disposed off or removed the movable fixed assets or immovable property given by him or it for the purpose of securing a term loan without the knowledge of the bank/lender | On November 02, 2019, there was news article in Times of India describing that the Police Team of Thane EOW broke opened the Dombivali Showroom of the company to recover valuables and documents and found out that the showroom had been emptied out. Further on November 03, 2019 the same news paper published another article saying that the EOW team did not find any gold on opening second Goodwin Jeweller Shop in Thane, Naupada area that was sealed by local police, raising their doubts about the promoter's intension.<br>Gold stock (inventory) is the primary security for the working capital facility sanctioned to the company. The promoters emptied the showrooms at Thane and Dombivali as evidenced by EOW police team would be construed as the act of disposing off or removing the current assets financed by the bank without the knowledge / approval of the bank/consortium. |

2. As you are aware that our Branch had sent the Show Cause Notice (SCN) referred above by registered post on January 29, 2020, which were returned undelivered. Hence, the returned SCNs were published in the newspaper on January 04. 2021. Even after 15 days from the publication of the above referred Show Cause Notice, we have not received any representation or response from you.

In the light of the aforesaid facts and circumstances and after perusing the documents on record the Wilful Defaulters Committee (WDC) of Bank has decided to declare the Guarantors as 'Wilful Defaulters' on the grounds mentioned in the show cause notice.

3. In order to comply principles of natural justice, it is proposed to provide you the final opportunity to submit your further representation, if any on the classification as Wilful Defaulter. If you, so desire, you may send your further submission/representation in writing, if any, for consideration by the Review Committee on Wilful Defaulters within **15 days from the date of this letter** as to why you may be not classified by Bank as a Wilful Defaulter.

4. Please note that, in case your further submission/representation against your classification as Wilful Defaulter is not received within 15 days from the date of this letter, it will be deemed that you have nothing to submit and the Bank will proceed further to classify you as Wilful Defaulter and report the same to Credit Information Companies (CICs).

5. Further, the Bank reserves the right to publish the name and photograph of Wilful Defaulter in news papers and will initiate the necessary recovery action as per extant guidelines issued by Reserve Bank of India.

6. This communication is issued as per the directions of the Wilful Defaulter Committee.

7. Kindly note that the above letter is being issued without the prejudice to the rights and remedies available to IDBI Bank Ltd in law/or contract.

Yours faithfully,
Sd/-
Authorised Officer
IDBI Bank Ltd.

---

**muthoot HOUSING FINANCE**

# MUTHOOT HOUSING FINANCE COMPANY LIMITED

**Registered Office:** TC NO.14/2074-7, Muthoot Centre, Punnen Road, Thiruvananthapuram - 695 034, CIN NO – U65922KL2010PLC025624
**Corporate Office:** 12/A 01, 13th floor, Parinee Crescenzo, Plot No. C38 & C39, Bandra Kurla Complex-G block (East), Mumbai-400051 TEL. NO: 022-62728500

**APPENDIX -IV[Rule 8(1)]Possession Notice(For Immovable Property)**

Whereas The undersigned being the Authorized Officer of the M/s. Muthoot Housing Finance Company Ltd., under the Securitisation And Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (ACT NO.54 OF 2002) and in exercise of powers conferred under section 13(12) read with rule 8 & 9 of the Security Interest (Enforcement) Rules, 2002 issued a demand notice to below mentioned Borrower/s / Guarantor/s.After completion of 60 days from date of receipt of the said notice, The Borrower/s / Guarantor/s having failed to repay the amount, notice is hereby given to the Borrower/s / Guarantor/s and the public in general that the undersigned has taken Symbolic Possession of the property described herein below in exercise of powers conferred on them under section 13(4) of the said Ordinance read with Rule 8 & 9 of the said Rules on this.

| Sr. No. | Name of Borrower / Co-Borrower/ Guarantor | Date of Demand notice | Total Outstanding Amount | Description of Secured Asset(s) /Immovable Property (ies) | Date of Possession |
|---|---|---|---|---|---|
| 1. | CHOUDAPPA NAGESHA K C LAN No. 11106075552 | 22-May-21 | 621085.17/- as on 19-May-21 | NO 97, KEREGUDDADAHALLI, KEREGUDDADAHALLI, BANGALORE, KARNATAKA, Bangalore Rural,560090,INDIA | 09.08.2021 |
| 2. | MUNISWAMI REDDY PADMAMMA LAN No. 11106075493 | 22-May-21 | 385578.59/- as on 19-May-21 | NO 56,SINGAYANA PALYA VILLAGE,MAHADEVAPURA, KARNATAKA, Bangalore, 560048,INDIA | 09.08.2021 |
| 3. | JAYALAKSHMI P DINESH A LAN No. 11106010808 | 06-May-21 | 671616.02/- as on 16-Apr-21 | NO 84,AMEMENT NO 129,KATHA NO 758,HEROHALI DHAKADE, BYADARAHALI VILLAGE,BANGALORE CITY, KARNATAKA, Bangalore,BAPAGRAM,INDIA | 09.08.2021 |
| 4. | PILLEGOWDA M JAYAMMA M LAN No. 11106062272 | 06-May-21 | 299484.51/- as on 16-Apr-21 | 21,BIDARAGER VILLAGE,KASABA HOBLI,BENGALURU, KARNATAKA,Bangalore,562106,INDIA | 07.08.2021 |

The Borrower/s / Guarantor/s in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of the M/s Muthoot Housing Finance Company Limited, for an above mentioned demanded amount and further interest thereon.

**Place : Bangalore** **Sd/- Authorised Officer**
**Date : 12-08-2021** **For Muthoot Housing Finance Company Limited**

---

# Stanpacks (India) Limited

**Regd. Office : "S.K.Enclave" New No.4 ( Old No.47),Nowroji Road, Chetpet, Chennai - 600 031.**
**CIN - L36991TN1991PLC021888, Website: www.stanpacks.in, Email: info@blissgroup.com**
**Tel: 91-44-26452325; Fax: 91-44-26451720**

**EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30.06.2021**

(Rs. In lacs except EPS)

| Sl. No. | Particulars | 3 Months ended 30.06.2021 | 12 Months ended 31.03.2021 | Corresponding 3 months ended 30.06.2020 |
|---|---|---|---|---|
| | | Un Audited | Audited | Un Audited |
| 1 | Total Income from Operations | 1,227.25 | 3,042.54 | 506.41 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 9.50 | (110.96) | (65.50) |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary items) | 9.50 | (110.96) | (65.50) |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | 9.50 | (134.78) | (65.50) |
| 5 | Total Comprehensive Income for the period | 9.50 | (134.78) | (65.50) |
| 6 | Equity Share Capital (Face Value of Rs.10 each fully paid up) | 609.60 | 609.60 | 609.60 |
| 7 | Reserves (excluding Revalution Reserve) as shown in the Balance Sheet | (442.76) | (452.26) | (382.98) |
| 8 | Earnings Per Share (of Rs. 10/- each) Basic & Diluted: | 0.16 | (2.21) | (1.08) |

**Note:** The above is an extract of the detailed format of Quarterly/Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly/Annual Financial Results are available on the Stock Exchange websites URL - http://www.bseindia.com/stock-share-price/stanpacks-(india)-ltd/stanpack/530931/ and Company's website www.stanpacks.in

**For and on behalf of the Board**

**Place : Chennai** **G. V. Gopinath**
**Date : 11.08.2021** **Managing Director**

---

**STOCK & SHARES**

We deal in illiquid shares of Companies listed at any Stock Exchange.
Interested Buyers/Sellers please contact
Mo: 9327311334
E-Mail: illiquidshares@gmail.com

---

3i Infotech
LIMITLESS EXCELLENCE

**3i Infotech Limited**
(CIN: L67120MH1993PLC074411)
Regd. office: Tower # 5, International Infotech Park, Vashi Station Complex, Navi Mumbai 400703, Maharashtra, India. Email: investors@3i-infotech.com Website: www.3i-infotech.com Tel No.:022- 7123 8000

**Extract of Unaudited Consolidated Financial Results for the quarter ended June 30, 2021**

(₹ in Lakhs Except EPS)

| Sr. No. | Particulars | Quarter Ended June 30, 2021 | Quarter Ended June 30, 2020 | Year Ended March 31, 2021 |
|---|---|---|---|---|
| | | (Unaudited) | (Unaudited) | (Audited) |
| 1 | Revenue from operations | 15,986 | 14,952 | 60,862 |
| 2 | Net Profit / (Loss) excluding Exceptional Income & including Discontinued Operations for the period (excluding additional charge of interest (notional) required under Ind AS 109 on Preference Share Capital, Foreign Currency Convertible Bonds (FCCBs) and interest free debts and before Tax) | (22) | 2,364 | 7,053 |
| 3 | Net Profit / (Loss) for the period including Exceptional Income & Discontinued Operations (after considering additional charge of interest (notional) required under Ind AS 109 on Preference Share Capital, Foreign Currency Convertible Bonds (FCCBs) and interest free debts and before Tax) | (680) | 1,204 | 41,422 |
| 4 | Net Profit / (Loss) for the period (including Exceptional Income & Dicontinued Operations) after tax | (787) | 1,049 | 39,116 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period after tax and Other Comprehensive Income after tax] | (919) | 1,179 | 38,719 |
| 6 | Paid up Equity Share Capital | | | 1,61,665 |
| 7 | Reserves (Other Equity) (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | | | (1,33,597) |
| 8 | Basic & Diluted Earnings Per Share (of ₹ 10/- each) For Continuing Operations | (0.05) | (0.10) | 1.59 |
| | Basic & Diluted Earnings Per Share (of ₹ 10/- each) For Discontinued Operations | - | 0.16 | 0.83 |
| | Basic & Diluted EPS (on Profit for the period excluding additional charge of interest (notional) on financial instruments) | (0.04) | (0.02) | 1.88 |

**Extract of Standalone Unaudited Financial Results for the quarter ended June 30, 2021**

(₹ in Lakhs)

| Sr. No. | Particulars | Quarter Ended June 30, 2021 | Quarter Ended June 30, 2020 | Year Ended March 31, 2021 |
|---|---|---|---|---|
| | | (Unaudited) | (Unaudited) | (Audited) |
| 1 | Revenue from operations | 5,310 | 4,957 | 20,777 |
| 2 | Net Profit / (Loss) for the period including Exceptional Income & Discontinued Operations (after considering additional charge of interest (notional) required under Ind AS 109 on Preference Share Capital, Foreign Currency Convertible Bonds (FCCBs) and interest free debts and before Tax) | 2,175 | 2,410 | 32,456 |
| 3 | Net Profit / (Loss) for the period (including Exceptional Income & Dicontinued Operations) after tax | 2,175 | 2,404 | 32,441 |

**Note:**
The above is an extract of the detailed format of Standalone and Consolidated Financial Results for the quarter ended on June 30, 2021 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Standalone and Consolidated Financial Results is available on the Stock Exchange websites (www.nseindia.com / www.bseindia.com) and the Company's website (www.3i-infotech.com).

**By order of the Board**
**for 3i Infotech Limited**

**Navi Mumbai** **Thompson Gnanam**
**August 10, 2021** **Managing Director & Global CEO**

